தமிழ் தமிழர்களின் தாய்மொழி. தமிழ் திராவிட மொழிக் குடும்பத்தின் முக்கிய மொழிகளில் ஒன்றும் செம்மொழியும் ஆகும். தென்னிந்தியாவில் தமிழ் நாட்டிலும் இலங்கையிலும், சிங்கப்பூரிலும் அதிக அளவில் பேசப்படும் இம்மொழி, துபாய், மலேசியா, தென்னாபிரிக்கா, மொரீசியஸ், பிஜி, ரீயுனியன், டிரினிடாட் போன்ற பல நாடுகளிலும் சிறிய அளவில் பேசப்படுகிறது. 1996-ம் ஆண்டு புள்ளி விவரப்படி உலகம் முழுவதிலும் 8 கோடி 50 இலட்சம் (85 மில்லியன்) மக்களால் பேசப்பட்டு, ஒரு மொழியை, தாய்மொழியாகக் கொண்டு பேசும் மக்களின் எண்ணிக்கை அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்ட மொழிகளின் பட்டியலில், தமிழ், பதி னெட்டாவது இடத்தில் உள்ளது.[1]

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேல் பழமை வாய்ந்த இலக்கிய மரபைக் கொண்டுள்ள தமிழ் மொழி, தற்போது வழக்கில் இருக்கும் ஒருசில செம்மொழிகளில் ஒன்றாகும்.[2] திராவிடமொழிக்குடும்பத்தின் பொதுக்குணத்தினால் ஒலி மற்றும் சொல்லமைப்புகளீல் சிறிய மாற்றங்களே ஏற்பட்டுள்ளதாலும் [3] மேலும் கவனமாகப் பழைய அமைப்புகளைக்காக்கும் மரபினாலும் பழங்கால இலக்கிய நடைகூட மக்களால் புரிந்து கொள்ளும் நிலை உள்ளது. எடுத்துக்காட்டாக, பள்ளிக் குழந்தைகள் சிறுவயதில் கற்கும் அகர வரிசை ஆத்திசூடி 1000 ஆண்டுகளுக்கு முன்னர் இயற்றியது. திருக்குறள் ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன் இயற்றியது.

பட்டினிப் போராட்டத்தில் ஈடுபட்ட வழக்கறிஞர்களுடன் சென்னை உயர் நீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர்கள் இப்ராஹிம் கலிஃபுல்லா, டி.முருகேசன் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தினர். இதன் பிறகு சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழில் வழக்காடலாம் என்று தலைமை நீதிபதி எம்.ஒய்.இக்பால், நீதிபதி டி.முருகேசன் ஆகியோர் அடங்கிய முதன்மை அமர்வு அறிவித்தது. நேற்று விசாரண்க்கு வந்த ஒரு வழக்கில் தமிழிலேயே வழக்கறிஞர் ஒருவர் வாதிட்டார். ஆயினும் தமிழில் தீர்ப்பு வழங்குவது குறித்து மத்திய, மாநில அரசுகள் எந்த பதிலும் தரவில்லை.

இதற்கிடையே பட்டினிப் போராட்டம் நடத்திய வழக்கறிஞர்கள் கைது செய்யப்பட்டு, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் பகத் சிங் உள்ளிட்ட வழக்கறிஞர்களின் உடல் நிலைஐ மோசமடைந்தது. உயர் நீதிமன்றத்தில் தமிழில் வழக்காட தலைமை நீதிபதி தலைமையிலான முதன்மை அமர்வு அனுமதியளித்துள்ளத போராட்டத்தை நிறைவு செய்யுமாறு வழக்கறிஞர்கள் சங்கம் கோரிக்கை விடுத்தது. அதனை ஏற்றுக்கொண்டு இன்றுடன் 15 நாட்களாக பட்டினி கிடந்து கடுமையாக போராடிய வழக்கறிஞர்கள் 6 பேரும் தங்களது போராட்டத்தை நிறைவு செய்தனர்.

உயர் நீதிமன்றத்தில் தமிழில் வழக்காடவும், தமிழில் தீர்ப்பு அளிக்க வேண்டும் என்று கோரியும் இன்றுடன் 15 நாட்களாக பட்டினிப் போராட்டம் நடத்திய மதுரை வழக்கறிஞ்சர்கள், வழக்கறிஞர்கள் சங்கம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க போராட்டத்தை நிறைவு செய்தனர்.

கடந்த 9ஆம் தேதி முதல் சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் செயலாற்றி வரும் வழக்கறிஞர்கள் பாரதி, எழிலரசு, பகத் சிங், இராஜேந்திரன்,

இராஜா, நடராஜன் ஆகியோர், உயர் நீதிமன்றத்தில் தமிழில் வழக்காட அனுமதியளிக்க வேண்டும் என்றும், தமிழில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகள் வழங்க வேண்டும் என்று கோரியும் பட்டினிப் போராட்டத்தை தொடங்கினர்.

மத்திய அரசின் தேசிய வேலை உறுதித் திட்டத்தில் முறைகேடுகள் நடப்பதாக மத்திய முன்னாள் அமைச்சரும், காங்கிரஸ் தலைவர்களில் ஒருவருமான ஈ.வி.கே.எஸ்.இளங்கோ கூறினார்.

ஈரோட்டில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மத்திய அரசின் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டம் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பல முறைகேடுகள் நடப்பது தெரிய வந்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ் வேலை செய்பவர்களுக்கு ஒரு நாள் ஊதியமாக ரூ.100 வழங்க வேண்டும். ஆனால் ரூ.70 மட்டுமே வழங்கப்படுகிறது. மீதி ரூ.30-ஐ சில அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் எடுத்துக் கொள்கிறார்கள்.

இளைஞர் காங்கிரசார் கிராமப்புறங்களின் நிலை குறித்து ஆய்வு நடத்தியபோது, இதுபோன்ற முறைகேடுகள் கண்டறியப்பட்டுள்ளன. இது தொடர்பாக தமிழக அரசு விசாரணை நடத்தி, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுக்காவிட்டால் காங்கிரஸ் சார்பில் போராட்டங்கள் நடத்தப்படும்.

தமிழகத்தில் மத்திய அரசின் திட்டங்கள் எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றன என்பதை இளைஞர் காங்கிரசார் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். ஏதேனும் முறைகேடு நடப்பது தெரிய வந்தால், நிச்சயமாக அதை எதிர்த்து காங்கிரஸ் கட்சி போராடும் என்று இளங்கோவன் கூறினார்.

தமிழ் வழி பி.இ. படிப்புகளுக்கான பாடத் திட்டங்களை சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பி. மன்னர் ஜவஹர் வெளியிட்டார்.

சென்னை, திருச்சி,திருநெல்வேலி அண்ணா பல்கலைக்கழகங்களின் உறுப்பு பொறியியல் கல்லூரிகளில் 2010-11-ம் கல்வி ஆண்டு முதல் தமிழ் வழியில் பி.இ. சிவில், மெக்கானிக்கல் பாடப் பிரிவுகள் தொடங்கப்படவுள்ளன. இதற்கான பாடப் புத்தகங்கள், பாடத் திட்டங்கள் போன்றவற்றைத் தயாரிக்கும் பணிகள் அண்ணா பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள், பேராசிரியர்கள் ஆகியோரைக் கொண்ட குழு மேற்கொண்டது.

அதன்படி, பாடத் திட்டங்களை வெளியிடும் நிகழ்ச்சி சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மன்னர் ஜவஹர் பாடத் திட்டங்களை வெளியிட, அதை கிண்டி பொறியியல் கல்லூரி முதல்வர் சேகர் பெற்றுக்கொண்டார்.

அப்போது பேசிய துணைவேந்தர் மன்னர் ஜவஹர், பி.இ. படிப்பின் முதலாண்டின் முதல் பருவத்துக்கான பாடப் புத்தகங்களான இயற்பியல், கணிதம், வேதியியல், பொறியியல் கிராபிக்ஸ் ஆகியவற்றுக்கான பாடத் திட்டங்கள் தயாரிக்கும் பணி தற்போது முடிந்துள்ளது.

பாடப் புத்தகங்கள் ஆகஸ்ட் 15க்குள் வெளியிடப்படும். தமிழ் வழியில் பி.இ.படிப்பைக் கொண்டு வருவதன் மூலம் தமிழ் வழி மாணவர்கள் மிகுந்த

பலனைப் பெறுவார்கள். அவர்களின் சிந்தனைத் திறனும் மேம்படும். கோவையில் செம்மொழி மாநாடு நடைபெறுவதையடுத்து பல்கலைக்கழகத்தில் குறுந்தொலைவு தொடர் ஓட்டம் அண்மையில் நடத்தப்பட்டது.

பொறியியல் மாணவர்களிடையே திருக்குறளைக் கொண்டுச் செல்லும் வகையில், கிண்டி பொறியியல் கல்லூரியில் (சி.இ.ஜி) டிஸ்ப்ளே மூலம் திருக்குறள் போட்டுக் காண்பிக்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. கிண்டி சி.இ.ஜி., குரோம்பேட்டை எம்.ஐ.டி. ஆகியவற்றில் உள்ள மாணவர்களின் விடுதிகளின் பெயர்கள் மலர்கள், நதிகள் ஆகியவற்றின் பெயரைக் கொண்டதாக மாற்றப்பட உள்ளன. கல்லூரிகளில் உள்ள துறைகளின் பெயர்கள் தற்போது ஆங்கிலத்தில் உள்ளன. இவை தமிழிலும் இடம்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.